# ஆகஸ்ட்– 08– புதன்

### புனித டோமினிக்

### ஆயர் தம் மந்தையைக் காப்பதுபோல் அதைக் காப்பார் என்று சொல்லுங்கள். எரே. 31:10

## முதல் வாசகம் ஏரேமியா 31 : 1– 7

ஆண்டவர் இவ்வாறு கூறுகிறார் : "அக்காலத்தில் இஸ்ரயேலின் குடும்பங்கள் எல்லாவற்றுக்கும் நான் கடவுளாய் இருப்பேன் அவர்கள் என் மக்களாய் இருப்பார்கள்." ஆண்டவர் கூறுவது இதுவே: "வாளுக்குத் தப்பிப் பிழைத்த மக்கள் பாலைநிலத்தில் என் அருளைக் கண்டடைந்தனர் இஸ்ரயேலர் இளைப்பாற விரும்பினர்.ஆண்டவர் அவர்களுக்குத் தொலையிலிருந்து தோன்றினார். உனக்கு நான் முடிவில்லாத அன்பு காட்டியுள்ளேன் எனவே பேரன்பால் உன்னை ஈர்த்துள்ளேன்.கன்னிப் பெண்ணாகிய இஸ்ரயேலே! உன்னை நான் மீண்டும் கட்டி எழுப்புவேன். நீயும் கட்டி எழுப்பப்படுவாய். மீண்டும் உன் மேளதாளங்களை நீ எடுத்துக்கொள்வாய் மகிழ்ச்சியுற்றோர் போல நடனம் ஆடிக்கொண்டு நீ வெளியேறுவாய். சமாரியாவின் மலைகள்மேல் திராட்சைத் தோட்டங்களை நீ மீண்டும் அமைப்பாய் தோட்டக்காரர் பயிரிட்டு விளைச்சலை உண்டு மகிழ்வர். ஏனெனில் ஒருநாள் வரும் அப்பொழுது எப்ராயிம் மலையில், "எழுந்திருங்கள் நாம் சீயோனுக்குப் போவோம் நம் கடவுளாகிய ஆண்டவரிடம் செல்வோம்" என்று காவலர் அழைப்பு விடுப்பர்.ஆண்டவர் தொடர்ந்து கூறுகிறார் யாக்கோபை முன்னிட்டு மகிழ்ந்து பாடுங்கள் மக்களினத் தலைவனைக் குறித்து ஆர்ப்பரியுங்கள் முழக்கம் செய்யுங்கள், புகழ்பாடுங்கள் "ஆண்டவர் இஸ்ரயேலில் எஞ்சியோராகிய தம் மக்களை மீட்டருளினார்!" என்று பறைசாற்றுங்கள்.

**பதில்பாடல் :** ஆயர் தம் மந்தையைக் காப்பதுபோல் ஆண்டவர்
நம்மைக் காத்தருள்வார்.

## நற்செய்தி : மத்தேயு 15 : 21 – 28

அக்காலத்தில் இயேசு தீர், சீதோன் ஆகிய பகுதிகளை நோக்கிச் சென்றார்.அவற்றின் எல்லைப் பகுதியில் வாழ்ந்துவந்த கானானியப்பெண் ஒருவர் அவரிடம் வந்து, "ஐயா, தாவிதீன் மகனே, எனக்கு இரங்கும் என்மகள் பேய்பிடித்துக் கொடுமைக்கு உள்ளாகி இருக்கிறாள்" எனக்கதறினார். ஆனால் இயேசு அவரிடம் ஒரு வார்த்தைகூட மறுமொழியாகச் சொல்லவில்லை. சீடர்கள் அவரை அணுகி, "நமக்குப் பின்னால் கத்திக்கொண்டு வருகிறாரே, இவரை அனுப்பிவிடும்" என வேண்டினர்.அவரோ மறுமொழியாக, "இஸ்ரயேல் குலத்தாருள் காணாமற்போன ஆடுகளாய் இருப்போரிடமே நான் அனுப்பப்பட்டேன்" என்றார்.ஆனால் அப்பெண் அவர்முன் வந்து பணிந்து, "ஐயா, எனக்கு உதவியருளும்" என்றார்.அவர் மறுமொழியாக, "பிள்ளைகளுக்குரிய உணவை எடுத்து நாய்க் குட்டிகளுக்குப் போடுவது முறையல்ல" என்றார்.உடனே அப்பெண், "ஆம் ஐயா, ஆனாலும் தங்கள் உரிமையாளரின் மேசையிலிருந்து விழும் சிறு துண்டுகளை நாய்க்குட்டிகள் தின்னுமே" என்றார். இயேசு மறுமொழியாக, "அம்மா, உமது நம்பிக்கை பெரிது. நீர் விரும்பியவாறே உமக்கு நிகழட்டும்" என்று அவரிடம் கூறினார். அந்நேரம் அவர் மகளின் பிணி நீங்கியது.

**தியானம்:** நமது நோக்கங்கள், எதிர்பார்ப்புக்கள், நமது வாழ்க்கையில் நாம் வைத்திருக்கக்கூடிய இலக்குகள் தெளிவாக, உறுதியானதாக இருக்கிறதா? எத்தனை சங்கடங்கள் வந்தாலும், அதில் உறுதியாக இருக்கிறோமா? இல்லையெனில் சோர்ந்து போகிறோமா? வாழ்வில் உறுதியாக இருந்து,எமது எதிர்பார்ப்பை செயல்படுத்தி, வெற்றிபெற நற்செய்தி (மத்தேயு 15:21-27) எமக்கு அழைப்பு விடுக்கிறது. நம்பிக்கையினால் இறைமகன் இயேசுவின் அருளை வென்றெடுத்த கனானேய விதவைப்பெண் ஒருவரின் வாழ்க்கையை, நற்செய்தி (மத்தேயு 15:21-27) விபரித்து, அந்தப்பெண், இயேசுவில் வைத்திருந்த நம்பிக்கையை பலவிதங்களில் வெளிப்படுத்துகிறது. அந்தப்பெண்ணின் பொறுமை, நம்மை திகைப்படையச் செய்கிறது. அவளது வாழ்வில் மிகப்பெரிய துன்பம் நேர்ந்து அவளது மகள், தீய ஆவியினால் ஆக்கிரமிக்கப்பட்டு, குடும்பமே சித்திரவதை அனுபவிக்கிறது. கவலையும், கண்ணீரும் அவளை வாட்டியெடுத்தாலும், அதனை வெளியே காட்டிக்கொள்ளாமல், துன்பங்களுக்கு மத்தியில் நம்பிக்கையோடு வாழக்கூடிய பெண்ணாக அவள் காணப்படுகிறாள். அந்தப்பெண் தனது துன்பங்களோடு இயேசுவை அணுகுகிறபோது, இயேசுவின் பதில் அவளுக்குக் கோபத்தை வரவழைக்கவில்லை. மாறாக, எப்படியாவது, இயேசுவிடமிருந்து, வல்லமையைப் பெற்றுவிடவேண்டும் என்பதில் அவளது நோக்கம் அடங்கியிருக்கிறது. சோர்வுகளுக்கு மத்தியிலும், பொறுமையோடு இயேசுவுக்கு பதில் சொன்னது, நம்மை மலைக்க வைக்கிறது. வாழ்வை நாம் எப்படி அணுகவேண்டும்? எப்படி அணுகக்கூடாது என்பதற்கு அவளது வாழ்க்கை சிறந்த எடுத்துக்காட்டு. நற்செய்தியில் (மத்தேயு 15:21-27) தெரிவிக்கப்படும் பெண் எமது தாயகத்தில் கண்ணீரோடும், வேதனைகளோடும் வாழும் எமது அன்னையர் பலரை நினைவூட்டுகிறாள். நமது வாழ்வில் துன்பம் வருகிறபோது, கவலை கொள்கிறோம். அந்தக் கவலை நம்மைச் சோர்வுறச்செய்கிறது. நமது வாழ்வு முடிந்துவிட்டது என்ற முடிவுக்கு வந்துவிடுகிறோம். பின்னால் வரவேண்டிய சாவை, நாமே முன்னால் வரவழைத்து விடுகிறோம். துன்பம் வரும்போதுதான், நாம் அதிக திடமாக இருக்கவேண்டும். கடவுளை அதிகமாக நாடவேண்டும். நமது விசுவாசம் வலுப்பெற்றதாய் மாறவேண்டும் எனப்படும் செய்தியை நற்செய்தி எமக்கு (மத்தேயு 15:21-27) சொல்லித்தருகிறது. கடவுளின் வல்லமையில் நம்பிக்கையோடு அவரை அணுகுவோர் ஏமாற்றமடையார் என்பதற்கு கனானேய விதவைப்பெண்ணின் ஆழ்ந்த நம்பிக்கை சிறந்த எடுத்துக்காட்டு.